பக்கங்கள்:-17


# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 17 | புதன்கிழமை | 04.10.2023 | அதிர்வு 64

## சுயாதீன விசாரணை கட்டாயம் வேண்டும்!

### வடக்கு சட்டத்தரணிகள் சங்கங்கள் கோரிக்கை

(விரிவான செய்தி 3ஆம் பக்கத்தில்)



முல்லைத்தீவு நீதிபதிக்கு இழைக்கப்பட்ட

# அநீதிக்கு எதிராக யாழில் இன்று பெரும் மனித சங்கிலிப் போராட்டம்


## அனைவரும் அணிதிரள்வோம் என்று சி.வி.கே. அறைகூவல்

- எஸ்.நிதர்ஷன் -


"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குக் கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையில் தமிழ்த் தேசியக் கட்சிகளால் இன்று யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மனித சங்கிலிப் போராட்டம் வெற்றி அளிப்பதற்குத் தமிழ் பேசும் மக்கள் தங்கள் பூரமான ஆதரவை வழங்க வேண்டும்."

–இவ்வாறுவடக்குமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

மருதனார்மடம் சந்தியில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் மனித சங்கிலிப் போராட்டம் 02



# நீதிக்காகத் தொடர்ந்தும் போராடுவார்கள் தமிழர்



இலங்கைக்கான புதிய பிரிட்டிஷ் தூதுவர் அண்ட்ரூ பற்றிக், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போது எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் உடனிருந்தார்.

## யாழ்.மனித சங்கிலிப் பேரணி தொடர்பில் சம்பந்தன் கருத்து

- சீ.ஏ.தமிழ்மாறன் -

"இலங்கையில்பேரினவாதஅடக்குமுறைகளுக்கு எதிராகத் தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்தும் போராட்டங்களை நடத்த வேண்டியுள்ளது. 02

# போராட்டத்தில் தமிழ் மக்கள் சகலரும் பங்கேற்க வேண்டும்

## தமிழ்த் தேசிய முன்னணியும் அழைப்பு



- எஸ்.நிதர்ஷன் -

"நீதிபதிக்கே நீதி கோரும் அவலத்தில் தமிழினம் உள்ளது. எனவே, நீதி கோரிய போராட்டங்களில் தமிழ் மக்கள் கலந்துகொள்ள அனைவரும் வேண்டும்."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் அறிக்கையூடாக அழைப்பு விடுத்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவுக்கு வழங்கப்பட்ட அழுத்தம் மற்றும் 02

----------/ திடீர் திருப்பம் /----------

## சீனக் கப்பலுடனான ஆய்விலிருந்து ருஹுணு பல்கலைக்கழகம் விலகல்

### அதனால் இலங்கைக் கடலில் ஆய்வுத் திட்டமும் 'அவுட்'?




சீனாவுக்குச் சொந்தமான 'ஷியான்-6'கப்பலுடன்இணைந்துமேற்கொள்ளவிருந்த ஆய்வு நடவடிக்கைகளில் இருந்து ருஹுணு பல்கலைக்கழகம் விலகத் தீர்மானித்துள்ளது.

ஆய்வின் இணைப்பங்காளர் விலகியுள்ளமையால் இலங்கைக் 08




ஆங்கிலத்தில் 'Blessing in disguise' என்று ஒரு பழமொழி உண்டு. பின்னடைவாகத் தோன்றியதிலும் நன்மை கிட்டினால் எப்படி இருக்கும்? அதை உருவகப்படுத்தும் ஒரு பழமொழிதான் இது.

இன்றைய மனித சங்கிலிப் போராட்டத்தை ஒட்டியும் இந்தப் பழமொழி பொருந்துகின்றது.

நீதிபதி அச்சுறுத்தப்பட்டமையும், 03

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதை எதிர்கொள்ள முடியாமல் உயிரைக் காப்பாற்ற அவர் நாட்டை விட்டு ஓடியமையும் தமிழர்களுக்குப் பெரும் பின்னடைவான – பாதிப்பான – நிகழ்வுகள்தாம்.

ஆனாலும், அந்தப் பேரினவாத அச்சுறுத்தலுக்கு எதிரான மக்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பு நடவடிக்கையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஐக்கியப்பட்டு நிற்கும் சூழல் பிறந்திருக்கின்றமை அந்தப் பின்னடைவிலும் கிட்டியுள்ள ஒரு நன்மையன்றோ...?

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் உள்ள ஐந்து கட்சிகள், நீதியரசர் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, இலங்கைத் தமிழரசுக் கட்சி போன்றவையே இந்தப் போராட்ட அமைப்பில் ஆரம்பத்தில் இணைந்திருந்தன.

எப்போதும் தனி வழி போகின்ற அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் உட்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் இப்போது இத்தகைய போராட்டங்களில் தமிழ் மக்களைப் பங்குபற்றுமாறு பகிரங்கக் கோரிக்கை விடுத்திருக்கின்றமை முக்கிய திருப்பம்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும், அவசர – அவசிய விடயங்கள் சிலவற்றை ஒட்டியாவது ஒரு தளத்தில் நின்று ஊடாடும் நிலைமையை உருவாக்குவது இன்றைய கட்டாயம். அதற்கான சாத்தியப்பாடு இப்போது உருவாகி வருகின்றது என்ற நம்பிக்கையை மக்கள் முன்னணியின் நேற்றைய அறிவிப்பு, உரிய சமயத்தில், உரிய முறையில் வெளியாகி, தமிழ் மக்கள் மனதில் வளர்த்திருக்கின்றது.

நீதிபதி அச்சுறுத்தப்பட்டமையை ஒட்டியும், இப்போதுள்ள கள நிலைவரங்களைத் தெளிவு படுத்தியும், ஒன்றுபட்டுக் கடிதம் ஒன்றை மேற்குலக நாடுகளின் தூதர்களுக்கு கையளிக்கத் தமிழ்த் தேசியக் கட்சிகள் தீர்மானித்திருக்கின்றன என்றும் தெரிகின்றது. அது சம்பந்தமான வரைவுக் கடிதம் ஜனாதிபதி சட்டத்தரணியும் எம்.பியுமான சுமந்திரனினால் தயாரிக்கப்பட்டு, நீதியரசரும் எம்.பியுமான சி.வி.விக்னேஸ்வரனால் மேலும் ஒரு பந்தி சேர்க்கப்பட்டு, தயார் நிலையில் இருப்பதாகத் தெரிகின்றது.

இன்றைய போராட்டத்தில் பங்குபற்றுகின்ற தமிழ்த் தேசியக் கட்சிகளின் அனைத்துத் தலைவர்களும் – தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட – அனைவரும் இத்தகைய கடிதம் ஒன்றை ஒன்றுபட்டு ஒப்பமிட்டு, மேற்குலகுக்கு வழங்கினால் அது பெரும் அழுத்தமாக மாறும் என்று நினைக்கிறேன். பின் நாள்களில் புதுடில்லிக்கும் கூட தமிழ்த் தேசியக் கட்சிகள் இத்தகைய கடிதம் ஒன்றை வழங்கக்கூடிய சூழலும் அதனால் உருவாகும்.

இன்றைய போராட்ட ஐக்கியம், நாளை மேற்படி கடிதத்தில் ஒப்பமிடுவதிலும் வெளிப்படுமானால், நலிவுற்றுள்ள தமிழர்கள் கொஞ்சம் நம்பிக்கை பெறலாம் என நினைக்கிறேன்.

+---------- +---------- +------

புதிய பிரிட்டிஷ் தூதுவர் அண்ட்ரூ பற்றிக் நேற்றுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பியை அவரது கொழும்பு இல்லத்தில் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின் போது யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் உடனிருந்தார். அச்சமயம் சில விடயங்களை புதிய பிரிட்டிஷ் தூதருக்குத் தெளிவாகச் சுட்டிக்காட்டினார் சம்பந்தன் என்று அறிய வந்தது. அவர் மிகச் சுருக்கமாக கூறிய விடயத்தின் சாரத்தை தருகிறேன். அது அவதானிக்கத் தக்கது.

"உங்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், உங்களின் காலனித்துவ நாடான இலங்கையை விட்டு வெளியேறிய போது, அச்சமயம் உங்கள் நாட்டில் இருந்த ஆட்சிமுறையை அப்படியே இங்கும் கையளித்து விட்டுச் சென்றுவிட்டீர்கள். ஆனால் அதற்குப் பின்னர் நீங்கள் உங்களின் ஆட்சி முறைமைகளைச் சீர்படுத்திக் கொண்டீர்கள். ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து, வேல்ஸ் எல்லாவற்றிற்கும் தாராளமாக அதிகாரப் பகிர்வைச் செய்து, சீரான உச்ச ஆட்சி முறைமையை உருவாக்கி, குடிமக்களின் நெறிமுறையான வாழ்வை உறுதிப்படுத்தியுள்ளீர்கள். ஆனால் நீங்கள் இங்கு விட்டுச் சென்ற ஆட்சிப் பாணியைக் கைவிட்டுத் திருந்த – திருத்த – மறுக்கும் இலங்கை, அதன் மூலம் பேரழிவின் விளிம்புக்கு வந்து நிற்கின்றது. இந்த ஆட்சி முறைமையே தொடருமானால் இங்கு ஒரு மக்கள் குழுமமாக தமிழர்கள் வாழ்வது சாத்தியப்பாடற்றதாகிவிடும்" – என்று தமது வயது முதிர்ந்த தளர்வுக்கு மத்தியிலும் அறுத்து, உறுத்துக் கூறினாராம் சம்பந்தன்.

தள்ளாத வயதிலும் தளராத உறுதி போலும்...!

+---------- +---------- +------

யுத்த காலத்தில் வடக்கில் நீதிமன்ற நிலைமைகளை ஒட்டி கடந்த 30ஆம் திகதி மற்றும் முதலாம் திகதி இப்பத்தியில் நான் எழுதிய விடயம், அதை விமர்சித்து ஸ்ரீதரன் எம்.பி. ஓரிரு நிமிடங்கள் கூறிய காணொலிக் கருத்தினால் பரபரப்பாகப் பலரினாலும் தேடிப் பிடித்து வாசிக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அந்த இரண்டு நாள் பத்தியும், அதை ஒட்டி நண்பர் ஸ்ரீதரன் எம்.பி.யின் விமர்சனக் கருத்தைப் போட்டுப் பிடித்து நேற்று நான் வரைந்த பத்தியும், உள்நாட்டிலும் புகலிட நாடுகள் பலவற்றிலும் ஆழமாக நோக்கப்பட்டிருப்பதை பிரதிபலிப்புகள் மூலம் உணர முடிந்தது.

ஸ்ரீதரன் எம்.பிக்கும் எனக்கும் நன்கு பரிச்சயமான நண்பர்கள் சிலர் – குடும்ப உறுப்பினர்கள் கூட – நான் கொஞ்சம் நீட்டி முழக்கி விட்டேன் என்று குறைபட்டுக் கொண்டார்கள். அவர்களிடம் ஒன்று மட்டும் சொன்னேன்.

"We both agree to disagree. தேவைப்படும் சமயங்களில் பிணங்கிப் போக நாங்கள் இணக்கம் கண்டுள்ளோம்." – என்றேன்.

பிணக்குப் பற்றி நேற்று எழுதினேன். நம் இணக்கம் பற்றி நாளை பார்ப்போமா...?

## போராட்டத்தில் தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவரது பதவி விலகல் என்பவை இலங்கையின் நீதித்துறைக் கட்டமைப்புச் சுயாதீனமாக இல்லை என்பதை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

இலங்கையின் நீதித்துறை சிங்கள பௌத்த மேலாதிக்கத்துக்கும், அதே மேலாதிக்கத்தின் பெயரால் நாட்டை நாசம் செய்தவர்களையும் சூறையாடியவர்களையும் கொலையாளிகளையும் சுதந்திரமாக நடமாட வைத்துள்ளது.

இந்த விடயங்களை வெளிச்சம் போட்டுக்காட்டும் சம்பவமாக நீதிபதி சரவணராஜாவின் சுயாதீனச் செயற்பாட்டுக்கு இடையூறான சட்டமா அதிபரின் தலையீடு மற்றும் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்கள் அமைந்திருந்தன.

இலங்கையின் நீதித்துறையில் அரசியல் தலையீடு, சிங்கள – பௌத்த தேசத்தின் நலன்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இதன் காரணமாகவே இலங்கை அரசால் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இன அழிப்புக்கும் நடைபெற்றுவரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கும் சர்வதேச நீதி விசாரணையை எமது அரசியல் இயக்கம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

இலங்கையின் அரச கட்டமைப்பு, நீதி கோரும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களையும் அதற்காகக் குரல் கொடுத்த சட்டத்தரணிகளையும் அச்சுறுத்தி வந்ததன் தொடர்ச்சியாக இன்று நீதிபதிக்கே அச்சுறுத்தல் விடுத்து தீர்ப்பை மாற்றக் கோரும் அளவுக்கு மோசமாகச் செயற்பட்டிருக்கிறது.

இந்த மோசமான நிலைமைக்கு எதிராகத் தமிழ் மக்கள் எழுச்சியடைய வேண்டும். இதற்கான நீதி கோரிய போராட்டங்களில் தமிழ் மக்களைக் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்." – என்றுள்ளது.

## நீதிக்காகத் தொடர்ந்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நீதி கிடைக்க அவர்கள் தொடர்ந்தும் போராடுவார்கள். முல்லைத்தீவு நீதிபதிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் இன்று முன்னெடுக்கப்படவுள்ள மனித சங்கிலிப் போராட்டத்திலும் தமிழ் பேசும் மக்கள் ஓரணியாகத் திரண்டு பங்கேற்பார்கள்."

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

"தமிழ்பேசும் மக்கள் மீதான அடக்குமுறைகள் இன்று நீதித்துறை மீதும் பாய்ந்துள்ளது. நீதிபதிகளைக் கூடப் பேரினவாதம் இன ரீதியில் நோக்குகின்றது" – என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"எல்லாவற்றுக்கும் போராடித்தான் நாம் நீதியை – தீர்வைப் பெற வேண்டுமெனில் ஜனநாயக ரீதியில் நாங்கள் தொடர்ந்தும் போராடுவோம். எமது போராட்டங்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் உரிய கவனம் செலுத்த வேண்டும்" – என்றும் சம்பந்தன் எம்.பி. மேலும் கூறினார்.

## அநீதிக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை வீதி முட்டாஸ் கடை சந்தியில் காலை 10

மணியளவில் நிறைவடையவுள்ளது.

எனவே, அனைத்து தமிழ் பேசும் மக்களும் கட்சி பேதங்களைக் கடந்து எமது முழுமையான எதிர்ப்பைக் காட்டும் முகமாக குறித்த மனித சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுமக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வர்த்தகர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள் என அனைத்துத் தரப்பினரும் மனித சங்கிலிப் போராட்டத்தில் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்வதோடு அனைவரும் ஒன்றிணைந்து எமது எதிர்ப்பைக் காட்டுவதன் மூலமே நீதித்துறையின் சுயாதீனத்தையும், நீதிபதிகளின் பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியும்.

எனவே, அனைவரும் அணிதிரண்டு எமது கண்டனத்தை இலங்கை அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் காட்டுவோம்." – என்றார்.

# முல்லை. நீதிபதி சரவணராஜா விடயத்தில் சுயாதீன விசாரணை கட்டாயம் வேண்டும்!

## வடக்கு சட்டத்தரணிகள் சங்கங்கள் கூட்டாகக் கோரிக்கை



**- விஜயரத்தினம் சரவணன் -**

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா அச்சுறுத்தலுக்குள்ளானமை மற்றும் அவர் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்ட விடயத்தில் சுயாதீனமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, உண்மைத்தன்மை வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண சட்டத்தரணிகள் சங்கத்தினர் ஒன்றிணைந்து வலியுறுத்தியுள்ளனர்.

அதேவேளை, நீதிபதி சரவணராஜா மீதான அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்களைப் பிரயோகித்த விடயம் நாட்டிலுள்ள சிறுபான்மையின மக்கள் மீதான ஒடுக்குமுறையின் உச்சகட்டம் எனவும், இவ்வாறான செயற்பாடுகள் மீள் நிகழாமையை உறுதிப்படுத்தவேண்டும் எனவும் வடக்கு மாகாண சட்டத்தரணிகள் சங்கத்தினரால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு இந்தச் செயற்பாட்டின்மூலம் நாட்டின் நீதித்துறையின் சுதந்திரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நீதித்துறையின் சுயாதீனத் தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது என்றும் வடக்கு மாகாண சட்டத்தரணிகள் சங்கத்தினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில்நேற்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியைத் தொடர்ந்து வடக்கு மாகாண சட்டத்தரணிகள் சங்கங்கள் தமது கருத்துக்களை முன்வைக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு**
**சட்டத்தரணிகள் சங்கம்**

"ஜனநாயக நாடான இலங்கையிலே, ஜனநாயகத்தை உச்சநிலையிலே பேணிப் பாதுகாப்பத்தகவிருந்தால், வலுவேறாக்கக் கொள்கையை மிக முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

நீதித்துறை, சட்டவாக்கத்துறை, நிர்வாகத்துறை என்பன தனித்தனிச் சுதந்திரமாக இயங்கவேண்டும். அதிலும் அதிமுக்கியத்துவம் வாய்ந்தது நீதித்துறையின் சுதந்திரமாகும்.

ஆகவே நீதித்துறையின் சுதந்திரம் பாதிக்கப்படுகின்றபோது, ஒரு நீதிபதியின் சுயாதீனத்தன்மை கேள்விக்குட்படுத்தப்படுகின்றபோது, சிறுபான்மையினம் பாதிக்கப்பட்ட இனமாகவும், நியாயத்தைப் பெறமுடியாத இனமாகவும் மாறியிருக்கின்றது.

நீதிபதிசரவணராஜாஏற்கவேகுருந்தூர் மலை விவகாரத்தில் கட்டளைகள் வழங்கியதன் அடிப்படையில், நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நாடாளுமன்றில் நீதிபதியை விமர்சித்து உரையாற்றியிருந்தார்.

அவ்வாறு நீதிபதியை விமர்சித்து நாடாளுமன்றில் சரத் வீரசேகர ஆற்றிய உரைக்கு எதிராக கடந்த ஜுலை மாதம் 11ஆம் திகதி பணிப்பகிஷ்கரிப்பொன்றை மேற்கொண்டிருந்தோம்.

அதனைத் தொடர்ந்து அதற்கும் மேலாக நீதிபதியின் சுயாதீனத் தன்மை இழக்கும் வகையில், தனிப்பட்ட ரீதியில் அவதூறானதும், அவமதிக்கின்றதுமான கூற்றுக்களை நாடாளுமன்றிலே சரத் வீரசேகர பேசியதன் அடிப்படையில், கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதியன்றும் பாரிய பணிப் பகிஷ்கரிப்பும் முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு அவ்வப்போது இத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தபோதும் நீதித்துறைச் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டதாகவோ அல்லது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவோ இல்லை. நாடாளுமன்றில் எதையும் பேசிவிடலாம் என்ற நிலை இருக்கக்கூடாது.

குறிப்பாக நீதிபதிகளின் சுதந்திரம், அவர்கள் வழங்கிய கட்டளைகள், தீர்ப்புக்களுக்கு எதிராக விமர்சனங்கள் செய்வது, அதைக் கேலிக்கூத்தாக்குவது தவிர்க்கப்பட வேண்டும்.

இவற்றினைக் கோரியே ஏற்கனவே இரண்டு போராட்டங்களையும், பணிப் பகிஷ்கரிப்புக்களையும் மேற்கொண்டிருந்தோம்.

இறுதியாக இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளிவைக்கும் விதமாக நீதிபதி சரவணராஜா கடந்த செப்டெம்பர் 23 ஆம் திகதியன்று தனது பதவியை இராஜிநாமா செய்திருந்தார்.

அவரது அந்தப் பதவி விலகலானது, அவருக்கு ஏற்பட்ட அழுத்தங்கள் மற்றும் உயிர் அச்சுறுத்தல் என்பவற்றின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டது என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது.

ஒரு நீதிபதி தீர்ப்பு அல்லது கட்டளை வழங்கினால் அந்த நீதிபதிக்கு எதிராக யாரும் வழக்கு வைப்பதில்லை. அவ்வாறு நீதிபதியால் வழங்கப்பட்ட கட்டளையில் ஒரு தரப்புக்கு திருப்தியில்லாமல் இருந்தால், மேன்முறையீடுகள் மற்றும் மீளாய்வு மனுக்களைச் செய்து கட்டளைகளை மாற்ற முடியும், திருத்த முடியும் அல்லது தமது விருப்பத்துக்கு ஏற்ற விதத்திலும் சில வேளைகளில் செய்து கொள்ளமுடியும்.

ஆனால்,நீதியைநிலைநாட்டுகின்றவர்களை பிரதிவாதியாக்கி, அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதென்பது எந்தச் சட்ட முறைமையின் கீழ் இங்கே நீதித்துறை செயற்பட்டிருக்கின்றது என்பதைக் கண்டுகொள்ள முடியாதிருக்கின்றது.

இலங்கையிலிருக்கின்ற நீதித்துறையாக இருந்தாலும், ஏனைய துறைகளாக விருந்தாலும் தமிழர்களுக்கு சரியான நீதியை வழங்கக்கூடியதல்ல. ஆகவே, நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பில், அவர் வெளிப்படுத்திய கூற்றுக்கள் தொடர்பில் சுயாதீனமானதொரு விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும்.

அதனடிப்படையில் உண்மைகள் கண்டறியப்பட்டு அதற்கான நீதி வழங்கப்படவேண்டும். இச்சம்பவம் சிறுபான்மையினருக்கெதிரான ஒடுக்குமுறையின் உச்சகட்டமென்றே இதனைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

எனவே, இது தொடர்பில் உரிய சுயாதீனமின ஆணைக்குழு அமைத்து, விசாரணைகள் செய்து, திருப்திகரமான முடிவுகள் வரும்வரை போராட்டம் தொடரும். போராட்டங்கள் பல்வேறு வடிவங்களிலும் முன்னெடுக்கப்படும்.

நீதிபதி சரவணராஜாவுக்கு ஏற்பட்ட அதே நிலைமை, முல்லைத்தீவு மாவட்டத்திலே கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற நீதிபதி லெனின்குமாரையும் பிரதிவாதியாக்கியிருக்கின்றனர்.

சிறுபான்மையினர் எந்தப் பதவிகளிலிருந்தாலும் அச்சுறுத்துவோம், அழுத்தங்களை வழங்குவோம் என்பதுபோல, சிறுபான்மையினரைத் துன்புறுத்துகின்ற, அவமானப்படுத்துகின்ற செயற்பாடுகளாக இவை இருக்கின்றது.

இவ்வாறு ஒவ்வொரு நீதிபதிகளும் அவமானப்படுத்தப்பட்டால், வடக்கு, கிழக்குமாகாணங்களிலுள்ள நீதிபதிகள் கூட சில வேளைகளில் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொள்ளக்கூடும்.

அவ்வாறு நீதிபதிகள் செய்வார்களாக விருந்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்கள் இடம்பெறாது. முற்றுமுழுதாக ஸ்தம்பிக்கும் நிலையும் ஏற்படும்.

இதனால் மக்களும் பாதிக்கப்படுவதுடன், அதற்கு மேலாக அரசும் பாதிக்கப்படும்.

ஆகவே, சுயாதீனமானதொரு விசாரணை ஏற்படுத்தப்பட வேண்டும், நீதித்துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும், நீதிபதிகளின் சுயாதீனத் தன்மை பேணப்படவேண்டும்.

தனிப்பட்ட கருத்துக்களோ, அவர்களது வாழ்கை முறைகளோ வெளியில் பேசுவ

**(4ஆம் பக்கம் பார்க்க...)**

# முல்லை. நீதிபதி...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி..)



தற்கு யாருக்கும் உரிமையில்லை. குடும்ப விவகாரங்களைப்பற்றிப் பேசுவது அநாகரிகமான விடயம்.

இவற்றையெல்லாம் உரிய அதிகாரிகளும் உரிய துறையினரும் கவனத்தில் எடுக்கவேண்டும்." – என்று முல்லைத்–தீவு சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

**யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம்**

"நீதிபதி சரவணராஜா அச்சுறுத்தல் காரணமாக இந்த நாட்டைவிட்டு வெளியேறிய விடயம் சாதாரண விடயமல்ல. இலங்கையைப் பொறுத்தவரையில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இந்த நாட்டைவிட்டு வெளிநாடுளில் சென்று அகதி அந்தஸ்து கோரிய சம்பவங்களை நாம் பார்த்திருக்கின்றோம்.

இந்த நாட்டில் நீதித்துறைக்கு மறைமுகமாக இருந்த அழுத்தங்கள், நீதிபதி சரவணராஜா விடயத்துடன் முழு உலகுக்கும் தெரியவந்துள்ளது.

இலங்கையிலுள்ள நீதித்துறைக்கு, நிறைவேற்றுத்துறை மற்றும் நிர்வாகத்துறை என்பவற்றினுடைய தலையீடும் அச்சுறுத்தலும் உள்ள விடயம் மிகப் பாரதூரமானதாகும்.

இவ்வாறு நீதபதிக்கு அழுத்தம் மற்றும், அச்சுறுத்தல் பிரயோகிக்கப்பட் விடயத்தில் ஒரு சுயாதீனமான, முழுமையான, பக்கச்சார்பற்ற விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியும், நீதி அமைச்சரும், பொலிஸ்மா அதிபரும் உறுதிசெய்ய வேண்டும் எனக் கோருகின்றோம்.

அத்தோடு இந்த விசாரணை எவ்விதமாக முன்னெடுக்கப்படும், இந்த விசாரணைகளின் முடிவில் நீதிபதி சரவணராஜாவுக்கு நீதி கிடைக்குமா என்பதை மங்களைப் போல் நாமும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம்.

இனி வரும் காலங்களில் நீதித்துறையினுடைய சுயாதீனத்தில் எந்தத் தலையீடும் இருக்கக்கூடாது என்ற எமது நிலைப்பாட்டை உறுதியாகக் கூறிவைக்க விரும்புகின்றோம்." – என்று யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

**மன்னார் சட்டத்தரணிகள் சங்கம்**

"எமது நாட்டைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கில் வாழுகின்ற சிறுபான்மையின மக்களுக்கு எதிரான பல அச்சுறுத்தல், சவால்கள் விடுக்கப்பட்டிருந்தன.

அது நிறைவேற்றுத்துறை மூலமாகவும், நிர்வாகத்துறை மூலமாகவும் இவ்வாறான சவால்கள் விடுக்கப்பட்டிருந்தன.

இருப்பினும் வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற சிறுபான்மை மக்களுக்கு நீதித்துறை மூலம் உரிய நீதிகள் கிடைத்தன என்ற ஒரு மனத் திருப்தி காணப்பட்டது.

இவ்வாறான நிலையில் தென்னிலங்கையில் இருக்கின்ற நிறைவேற்றுத்துறையும், நிர்வாகத்துறையும் நீதித்துறைக்கு அச்சுறுத்தலையும் சவாலையும் விடுக்கின்றதென்றால் வடக்கு, கிழக்கில் வாழும் சிறுபான்மை மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறியிருக்கின்றது.

எனவே, சட்டத்தரணிகளான நாம் நீதித்துறையில் அங்கத்தவர்கள் என்ற வகையில், இவ்வாறு நீதித்துறைக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலையும், நீதியைச் செலுத்துவதில் இருக்கின்ற இடர்பாடுகளையும் எதிர்த்து சட்டத்தரணிகளான நாம் போராட வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டிருக்கின்றது.

தற்போது இந்த நாட்டில் நீதித்துறையே தனது பதவியைத் துறந்து வெளிநாட்டிற்குத் தஞ்சம் புகும் அளவுக்கு நீதித்துறைக்குச் சவால் ஏற்பட்டிருக்கும் நிலையில், சர்வதேசம் இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்த அச்சுறுத்தல் நிலையைக் கவனத்தில்கொள்ள வேண்டிய தேவையிருக்கின்றது.

ஒரு ஜனநாயக நாட்டில் வலுவேறாக்கக் கோட்பாடு பயன்படுத்தப்பட வேண்டும். நீதித்துறை, நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை தனித்தனியே சுதந்திரமாக இயங்கவேண்டும்.

அதிலும் குறிப்பாக நீதித்துறை எந்தவித அழுத்தங்களோ, அச்சுறுத்தல்களோ இன்றி சுதந்திரமாக இயங்கும்போதுதான் ஒரு நாட்டிலிருக்கின்ற சாதாரண மக்கள் தொடக்கம் ஏனைய துறை வரைக்குமிருக்கின்றவர்களுக்கு நீதித்துறையிலும், இந்த நாட்டின் ஜனநாயகத்தின் மீதும் நம்பிக்கை ஏற்படும்.

இந்நிலையில் ஒரு நீதிபதியே தனது நீதியைச் செலுத்த முடியாத அளவுக்கு தனக்கிருக்கும் அச்சுறுத்தலால்தான் பதவி விலகுவதாக எழுத்து மூலம் அறிவித்துவிட்டு செல்கின்றார் என்றால், தற்போது வடக்கு, கிழக்கிலுள்ள சிறுபான்மை மக்களுக்கு மாத்திரமல்ல நீதிபதிக்கும் அச்சுறுத்தல் இருக்கின்றது என்ற செய்தியைதனதான் தென்னிலங்கை வடக்கு கிழக்கிற்கு சொல்லியிருக்கின்றது.

அத்தோடு இவ்வாறு நீதிபதி பதவி துறப்பதற்குக் காரணமாகவிருந்த அந்த அழுத்தம் கொடுத்தவர் யார் என்பதையும், அழுத்தம் கொடுக்கக் காரணமானவர்கள் யார் என்பதையும் கண்டுபிடிப்பதற்கு சுதந்திரமான ஒரு விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும், அதற்கு சுதந்திரமான குழுவொன்றை நியமிக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்." – என்று மன்னார் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

**வவுனியா சட்டத்தரணிகள் சங்கம்**

"நீதிபதிசரவணராஜாவின்பதவிவிலகல் கடிதத்திலே தனக்கு ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்கள், பயமுறுத்தல் காரணமாக பதவி விலகுவதாகக் கூறியிருக்கின்றார்.

நீதிபதி சரவணராஜா குருந்தூர்மலை தொடர்பான வழக்கிலே வழங்கிய கட்டளையை அடுத்தே குறித்த அழுத்தங்களும், பயமுறுத்தல்களும் அவருக்கு வழங்கப்பட்டிருக்கும் என நாம் கருதுகின்றோம்.

சிறுபான்மை இனத்தைச் சார்ந்த எவரும் தமது கடமைகளைச் சரிவரச் செய்தால் அவர்களுக்கு இவ்வாறான அழுத்தங்கள் மற்றும் பயமுறுத்தல்கள் ஏற்படும் என்பது இதன்மூலம் தெட்டத் தெளிவாகின்றது.

நீதிபதி சரவணராஜா யாருக்கு எதிராக நீதி வழங்கினாரோ அவர்களிடமே விசாரிக்கின்ற பொறுப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.


இது எவ்வளவுக்குச் சாத்தியமாகும் அல்லது உண்மைத்தன்மையாக இருக்கும் என்ற கேள்வி எங்கள் எல்லோருடைய மனங்களிலேயும் எழுகின்றது.

எனவே, சுயாதீனமான குழு ஒன்றை அமைத்து, சுயாதீனமான விசாரணை ஒன்றை நடாத்தி இதன் உண்மைத்தன்

**(5ஆம் பக்கம் பார்க்க...)**

# நீதிபதிக்கே இந்தக் கதி என்றால் தமிழர் இங்கே வாழ்வது எப்படி?

## எதிர்ப்பைக் காட்ட இன்று அணி திரளுங்கள் மக்களுக்குச் சித்தார்த்தன் எம்.பி அழைப்பு



**- எஸ்.நிதர்ஷன் -**

**"நாட்டிலுள்ள ஒரு நீதிபதிக்கே தொடர்ச்சியாக அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி, நாட்டைவிட்டு அவரைத் தப்பி ஓடச் செய்யும் அளவுக்கு மோசமான நிலைமைகள் இருக்கின்றன என்றால் எமது மக்கள் எப்படி இங்கு வாழ முடியும்?"**

**- இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

நீதிபதி சரவணராஜா விவகாரத்தில் எமது மக்கள் எந்தளவு தூரத்துக்குக் கொந்தளித்திருக்கின்றார்கள் என்பதைச் சர்வதேசத்துக்குக் காட்டுவதற்குப் பேதங்கள் இல்லாமல் யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறும் மனித சங்கிலிப் போராட்டத்துக்கு அணிதிரண்டு வருமாறும் அவர் அறைகூவல் விடுத்துள்ளார்.

மனித சங்கிலிப் போராட்டத்துக்கு ஆதரவு கோரி தமிழ்த் தேசியக் கட்சிகளின் துண்டுப்பிரசுர விநியோகம் நேற்று இடம்பெற்றது. அப்போது ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"முல்லைத்தீவு நீதிபதிக்குப் பல்வேறு தரப்புக்களாலும் கடுமையான அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதுவும் நாட்டை விட்டு அவரைத் துரத்தும் அளவுக்குத் தொடர்ந்தும் அவர் பயமுறுத்தப்பட்டிருக்கின்றார்.

இதில் முக்கியமாக பல அரசியல்வாதிகளால் நாடாளுமன்றத்துக்குள்ளும் நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் அவர் தொடர்ச்சியாக மிரட்டப்பட்டிருக்கின்றார்.

குறிப்பாக இராணுவம் மற்றும் பொலிஸாருடைய புலனாய்வாளர்களும் நீதிபதியைக் கண்காணித்துப் பின்தொடர்ந்து சென்றிருக்கின்றார்கள்.

இவ்வாறு தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல்கள் காரணமாக இந்த நாட்டை விட்டே அவர் தப்பி ஓடியிருக்கின்றார்.

இந்த நிலைமை ஒரு நீதிபதிக்கே உருவாகியிருக்கின்றது என்றால், அது, சாதாரண மக்களை எவ்வளவு தூரம் இந்த நாட்டிலே வாழுவது உசிதம் என்ற எண்ணத்துக்குக் கொண்டு சென்றிருக்கும்?

இத்தகைய செயற்பாடு நிச்சயமாகவே இங்குள்ள மக்கள் எல்லோரையும் அச்சுறுத்திப் பயமுறுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையாகவே நான் பார்க்கின்றேன்.

இவர் நாட்டை விட்டு ஓடுவதற்காகச் செய்யப்பட்ட செயல்களைக் கண்டித்து யாழில் மனித சங்கிலிப் போராட்டம் நடத்துகின்றோம். அதற்கு அனைத்து மக்களையும் அறைகூவி அழைக்கின்றோம்.

இதற்கமைய மக்கள் திரண்டு இந்தப் போராட்டத்துக்கு ஆதரவை வழங்கி, சர்வதேசத்துக்குச் சரியான செய்தியைச் சொல்ல வேண்டும். ஆகையினால் எமது மக்கள் எவ்வளவு தூரம் கொந்தளித்திருக்கின்றார்கள் என்ற செய்தியையும் இங்கு ஏற்படுத்தப்படும் மிக மோசமான நடவடிக்கைகளையும் உலகுக்கு வெளிப்படுத்த வேண்டும். அனைவரும் அணி திரண்டு வாருங்கள்." – என்றார்.

## முல்லை. நீதிபதி...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மையை அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் முன்வைக்கின்றோம்." – என்று வவுனியா சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

### சாவகச்சேரி சட்டத்தரணி கள் சங்கம்

"கடந்த காலங்களிலும் நீதித்துறையின் மீது அரசியல் தலையீடுகள், நிர்வாகக் கட்டமைப்புக்களின் தலையீடுகள் இருப்பது பற்றி நாடாளுமன்றில்கூட பேசப்பட்டிருக்கின்றது.

அதன் தொடர்ச்சியாக தற்போது கட்டுமீறிப்போன ஒரு நிலையிலே நீதிபதிக்கு நேரடியாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு தமது கடமைகளைச் சுயாதீனமாகவும், உண்மையாகவும் செய்ய முடியாத நிலைமை ஏற்படுத்தப்பட்டு அவர் தற்போது நாட்டைவிட்டு வெளியேறும் சூழலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார். ஆகவே, இத்தகைய தலையீடுகள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கவை.

இலங்கை அரசானது சர்வதேசத்துக்கு ஒரு முகத்தையும், உள்நாட்டுக்குள் ஒரு முகத்தையும் காட்டிக்கொண்டிருக்கின்றது.

குறிப்பாக சிறுபான்மை இனத்தைச் சார்ந்திருக்கக்கூடிய நீதிபதிகள் தமது கடமைகளைச் சுயாதீனத்துடன், அச்சமின்றியும் மேற்கொள்ள முடியாத ஒரு சூழலை இந்தச் சம்பவம் ஏற்படுத்தியிருக்கின்றது.

ஒரு நீதிபதி கட்டளை ஆக்குகின்ற போது, அந்தக் கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கான ஏற்பாடுகள் சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கின்றது.

அதைவிடுத்து கட்டளை வழங்கிய நீதிபதியை நோக்கி அச்சுறுத்தல் விடுப்பதென்பது மிகப் பாரதூரமான ஒரு விடயமாகும்.

குறித்த நீதிபதி அவரது கடமைகளைத் தொடர்ந்து நடத்த முடியாத அளவுக்கு – நாட்டைவிட்டு வெளியேறிச் செல்கின்ற அளவுக்கு அந்த அச்சுறுத்தல் இருந்திருக்கின்றது.

இந்தச் செயற்பாடு சிறுபான்மையினத்தின் மீதான அடக்குமுறையின் வெளிப்பாடு என்றே கூறவேண்டும்.

தற்போது இந்த நாட்டில் நீதித்துறை சுதந்திரமானதாக இல்லை என்கின்ற நிலை சர்வதேசத்துக்கும் எமக்கும் சொல்லப்பட்டிருக்கின்றது. நீதித்துறை என்பது மிகவும் சுதந்திரமாக இயங்க வேண்டிய ஒன்றாகும்.

எனவே, நீதித்துறையை நம்பியுள்ள மக்கள், நீதித்துறை மீது நம்பிக்கை இழந்துவிடக் கூடாத வகையில், நடந்த விடயங்கள் அனைத்தையும் சுயாதீனமாக விசாரணை செய்து, நீதித்துறை எந்தவிதமான தலையீடுமின்றி சுதந்திரமாக இயங்குவதற்கு வழியேற்படுத்தப்பட வேண்டும்." – என்று சாவகச்சேரி சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

### கிளிநொச்சி சட்டத்தரணிகள் சங்கம்

"நீதிபதி சரவணராஜாவுக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்தத் துர்ப்பாக்கிய நிலைமை வடக்கு மாகாணத்தில் மாத்திரமல்ல, இலங்கையிலுள்ள சிறுபான்மை இனத்தைச் சார்ந்த எவருக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்படக் கூடாது.

பாதிக்கப்பட்ட நீதிபதியின் பக்கம் நின்று நாம் குரல் கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த நீதிபதிக்கு ஏற்பட்ட விடயத்துக்கு எதிராக எங்கெல்லாம் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றதோ அனைத்துக்கும் கிளிநொச்சி சட்டத்தரணிகள் சங்கத்தின் ஆதரவு இருக்கும்." – என்று கிளிநொச்சி சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தோடு இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மல்லாகம் மற்றும் பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தினர் நீதிபதிக்கு ஆதரவாகத் தாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் தொடர்ந்து ஆதரவு வழங்குவோம் என்று தெரிவித்துள்ளனர்.

# நீதிபதிக்கு சட்டமா அதிபர் அழுத்தம்; நீதித்துறைக்குச் சாவு மணி அடிப்பு!

## சபையில் சிறீதரன் எம்.பி. கொதிப்பு

**“விடுக்கப்பட்ட கட்டளையை மீளப்பெறுமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்குச் சட்டமா அதிபர் அழுத்தம் பிரயோகித்துள்ளார். இந்த நாட்டில் நீதித்துறைக்குச் சாவு மணி அடிக்கப்பட்டுள்ளது. நீதிபதிகள் சுயாதீனமாகச் செயற்பட முடியாத நிலையில் எவ்வாறு தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்? இதனால்தான் சர்வதேச விசாரணையைத் தொடர்ந்து வலியுறுத்துகின்றோம்.”**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.**



நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் ஆகியன மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் காரணமாகப் பதவி துறந்து நாட்டை விட்டு வெளியேறுவதற்குக் காரணமாக இருந்த ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்களின் இனவாதக் கருத்துக்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் பேரினவாத அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நாட்டின் நீதித்துறை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது என்பதை இந்தச் சம்பவம் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. நாட்டின் நீதித்துறை அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளது என்பதை நாட்டு மக்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். 2005, 2006 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் யாழ்ப்பாணத்தில் நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் இராணுவ வாகனத்தின் ஊடாகக் கொலை செய்யும் முயற்சி எடுக்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க வலுக்கட்டாயமான முறையில் பதவி நீக்கப்பட்டார். இந்த நாட்டில் நீதி இல்லை என்பதற்குப் பல விடயங்கள் சான்று பகர்கின்றன. படுகொலை செய்யப்பட்ட ஜோசப் பரராசசிங்கம் உள்ளிட்ட பல தலைவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை.

திருகோணமலையில் கொல்லப்பட்ட 5 மாணவர்களுக்கும், கொலை செய்யப்பட்ட பிரான்ஸ் நாட்டு நிறுவனத் தொண்டர்களுக்கும் நீதி கிடைக்கவில்லை.

வழங்கிய கட்டளையை மீளப்பெறுமாறு சட்டமா அதிபர் விடுத்த அழுத்தத்தால் முல்லைத்தீவு நீதிபதி பதவி துறந்து நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். இந்த நாட்டில் தொடர்ந்து சுயாதீனமாகச் செயற்பட முடியாது என்பதை நீதிபதி தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

சிங்களப் பேரினவாதக் கொள்கையில் இருந்து விடுபட்டு அரச தலைவர்கள் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவார்கள் என்பது கானல் நீராகவே காணப்படுகின்றது.

முல்லைத்தீவு நீதிபதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலுக்கு நீதி கோரி கிளிநொச்சி பிரதேச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்கள்.

குருந்தூர் மலையில் உள்ள சிவன் ஆலயத்தை இடித்தழித்து அங்கு பௌத்த விகாரை கட்டும்போது கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள வேண்டாம் என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தடை உத்தரவு பிறப்பித்தபோது பௌத்த பேரினவாதக் கொள்கையுடையவர்கள், பௌத்த பிக்குகளை ஒன்றுதிரட்டி படைபட்டாளத்துடன் ஒன்றிணைந்து குருந்தூர் மலையில் பௌத்த விகாரையைக் கட்டி முடித்துள்ளார்கள். இது நீதிமன்றத்தை அலட்சியப்படுத்தும் செயற்பாடாகும்.

திருகோணமலையில் அரிசிமலைப் பகுதியில் கிழக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரையைப் புறக்கணித்துப் பல வந்தமான முறையில் பௌத்த விகாரை கட்டப்படுகின்றது. இந்த நாட்டில் நீதி எங்குள்ளது? நாட்டின் நீதித்துறைக்குச் சாவு மணி அடிக்கப்பட்டுள்ளது. அரசின் செயற்பாடுகளை விமர்சிக்கும் மக்களை முடக்கவே அரசு முயற்சிக்கின்றது. எவ்வகையான அடக்குமுறையைக் கொண்டு வரலாம் என்றே அரச தலைவர்கள் சிந்திக்கின்றார்கள்.

இந்த நாடு முன்னேற்றமடைவதற்கு எந்தச் சாத்தியமும் கிடையாது. முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர்மலை விவகாரம், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்தை விசாரணைக்கு எடுத்துக்கொண்டதால் நீதிபதி சரவணராஜா பாரிய நெருக்கடிக்குள்ளானார். தமிழ் நீதிபதி நீதி வழங்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர பேரினவாதக் கருத்தை வெளியிட்டார்.

இலங்கையில் நீதித்துறை இறந்துள்ளது. இந்த நாட்டிலா இன நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டோருக்குத் தீர்வு கிடைக்கப் போகின்றது. இதனால்தான் நாங்கள் தொடர்ந்தும் சர்வதேச விசாரணையைக் கோருகின்றோம். தீர்வுத் திட்டங்களுக்காகக் கொண்டுவரப்பட்ட அறிக்கைகள், திட்டங்கள் அனைத்தும் கிடப்பில் போடப்பட்டுள்ளன. சகல இனங்களையும் ஒன்றிணைத்து இந்த நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பிரச்சினைகளுக்குச் சர்வதேச விசாரணை ஊடாகத் தீர்வு கோருகின்றோம். இந்த நாட்டில் நீதி கிடைக்காது, நீதிக் கட்டமைப்பு அரசியல் தலையீட்டால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.” – என்றார்.

# இம்மாதம் முதல் நீர் கட்டணத்துக்கு இலத்திரனியல் பட்டியல் அறிமுகம்

இந்த மாதம் முதல் நீர் கட்டணத்துக்கு இலத்திரனியல் கட்டணப் பட்டியல்களை விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக, கட்டணப் பட்டியல்களை அச்சிடுவதற்கான செலவுகளைக் குறைக்கும் நோக்கில் இலத்திரனியல் கட்டணப் பட்டியல்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, வாடிக்கையாளர்கள் தமது கட்டணப் பட்டியல் இலக்கத்தை 071 93 99999 எனும் இலக்கத்துக்கு அனுப்பி இலத்திரனியல் கட்டணப் பட்டியல்களுக்காகப் பதிவு செய்துகொள்ள முடியும் எனவும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

தொலைபேசி இலக்கத்தை மாற்றுவதற்கு மீண்டும் குறித்த நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# நீதிபதிகளினதும் நீதிமன்றத்தினதும் சுயாதீனத்தைப் பாதுகாக்க வேண்டும்

## பிரதம நீதியரசரிடம் நீதிச் சேவைகள் சங்கம் கோரிக்கை



**முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் பதவி விலகலுக்கான காரணத்தையும் பொறுப்புக்கூற வேண்டியவர்களையும் கண்டறிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், நீதிபதிகளினதும், நீதிமன்றத்தினதும் சுயாதீனத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நீதிச் சேவைகள் சங்கம் பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

நீதிமன்றத்தின் பாதுகாப்பு மற்றும் கௌரவத்துக்காகத் தாங்கள் தொடர்ச்சியாக முன்னிற்கின்றார்கள் என்று மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்ற நீதிபதிகளின் தொழில்சார் சங்கமான நீதிச் சேவைகள் சங்கம், பிரதம நீதியரசருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவுநீதிபதியின்பதவிவிலகல் ஒரே தடவையில் எழுந்தமாக ஏற்பட்ட ஒன்றல்ல என்றும் நீதிச் சேவைகள் சங்கம், பிரதம நீதியரசருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

அது படிப்படியாக அதிகரித்த – நீதிமன்றத்தின் மீதான மக்களின் நம்பிக்கையைச் சிதைப்பதற்காக இலக்கு வைக்கப்பட்ட – திட்டத்தின், எதிர்பார்க்கப்பட்ட விளைவு என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதிமன்றத் தீர்மானத்தின் காரணமாக தமக்கு ஏற்பட்ட உயிர் அச்சுறுத்தலால் அவசரமாகக் கடிதத்தை அனுப்பிவிட்டு நீதிபதி நாட்டை விட்டு வெளியேறுவாராயின், அந்த நாட்டில் நீதித்துறையின் மீதான நம்பிக்கை இழக்கப்படுவதையும் எளிதில் மீட்டெடுக்க முடியாத நிலை ஏற்படும் என்பதையும் நீதிச் சேவைகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# பூசகரின் உதவியாளர் சடலமாக மீட்பு

பூசகர் ஒருவரின் உதவியாளர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஹட்டன், கிலவட்டன் தோட்ட ஆலயப் பூசகரின் உதவியாளரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று பகல் இடம்பெற்றுள்ளது என்று தோட்ட நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஹட்டன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புதிய வணிக மேல் நீதிமன்றத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானம்

புதிய வணிக மேல் நீதிமன்றம் ஒன்றை நிறுவுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக நாட்டில் மிகவும் ஆரோக்கியமான முதலீட்டுச் சூழலைப் பேணிச் செல்ல வேண்டிய தேவை அடையாளம் காணப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, வணிகம்சார் விடயங்கள் தொடர்பில் தற்போது நிலுவையில் காணப்படும்அதிகளவிலானவழக்குகளுக்குத் துரிதமாகத் தீர்வு காணப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக புதிய வணிக மேல் நீதிமன்றமொன்றை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

புதிய வணிக மேல் நீதிமன்றமானது கொழும்பு 12 – நீதிமன்ற வீதியில் நிறுவப்படவுள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# மேல் மாகாணத்தில் 4 ஆயிரம் ஆசிரியர்களை சேவையில் இணைத்துக்கொள்ளத் தீர்மானம்

மேல் மாகாணத்தில் 4 ஆயிரம் ஆசிரியர்களை சேவையில் இணைத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காகப் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று மேல் மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாள்களில் நேர்முகப் பரீட்சையை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

மேல் மாகாணத்தில் தற்போது 4 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

ஆங்கிலம், தமிழ் மொழி பாடங்களைக் கற்பிப்பதற்காக ஆசிரியர்கள் இல்லாத பிரச்சினை காணப்படுகின்றது என்றும் மேல் மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதித்துறைக்கும் விரோதி

ஜனநாயகத்தைப் பேணவும், பாதுகாக்கவும் சுயாதீனமான நீதித்துறை மிக மிக அவசியமாகும். அது இன்றியமையாததும் கூட.

நாட்டில் ஜனநாயகம் கேலிக்கூத்தாகும் நிலையில் - கேவலமாக்கப்படும் நிலையில் - நீதித்துறையின் சுயாதீனமும் நிலை குலைந்து வருகின்றது.

இது, அராஜகமும் அடக்குமுறையும் கட்டவிழவும், நிறைவேற்றதிகாரத்தின் எதேச்சாதிகாரம் உறுதியுடன் நிலை நிறுத்தப்படவும் வழி செய்யப்படப் போகின்றது என்பதற்கான கட்டியம்தான்.

நாடு மீண்டும் இருண்ட யுகத்துக்குள் - மீள முடியாத நெருக்கடிக்குள் - மூழ்கப் போகின்றது என்பதே அச்சப்பட வைக்கும் யதார்த்த நிலைமையாகும்.

பொருளாதார நிலையில் ஏற்கனவே தோற்றுப் போன நாடாகி விட்ட இலங்கை, இப்போது ஜனநாயக விழுமியங்கள், சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றைத் தொலைத்த நாடாகவும் மாறப்போகின்றது என்பது புறமொதுக்க முடியாத உண்மையாகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தவிடாமல், நிறைவேற்றதிகாரம் பண்ணிய திருகுதாளத்துக்கு சட்டம் இயற்றும் துறையான நாடாளுமன்றம் துணை போனது. இதைத் திருத்தி, ஜனநாயக விழுமியங்களை நிலை நிறுத்தும் தனது தலையாய கடப்பாட்டை நீதி, சட்டத்துறை நிறைவேற்ற முயன்றபோது, நாடாளுமன்றம் அதற்குக் குறுக்கே தடை போட்டு, அந்த நடவடிக்கையைக் குழப்பியமை மட்டுமின்றி, நீதித்துறையை அச்சுறுத்தி அடக்கும் எத்தனைத்தையும் மேற்கொண்டிருக்கின்றது.

இதுவே நாட்டில் ஜனநாயகமும், அதைப் பேணிப் பாதுகாத்து உறுதி செய்ய வேண்டிய நீதித் துறையும் சீரழிந்து போவதற்கான ஆரம்ப புள்ளி என்று சுட்டப்படுகின்றது.

உள்ளூராட்சித் தேர்தல்கள் உரிய காலத்தில் அறிவிக்கப்பட்டன. ஆனால் அதற்காக வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை முடக்கியதன் மூலம் தேர்தலை நடத்த விடாமல் முட்டுக்கட்டை போட்டார் நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

விவகாரம் நீதிமன்றுக்குப் போனது. உள்ளூராட்சித் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதால் வரவு - செலவுத் திட்டத்தில் அந்தத் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை உடன் வழங்குமாறு நிதி அமைச்சுக்கு உத்தரவிட்டது நீதிமன்றம்.

ஆயினும், நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதைச் செய்யவே இல்லை. நிதியை விடுவிக்காமல் தடுக்கச் செய்து, உள்ளூராட்சித் தேர்தலை இல்லாமலாக்கினார். தாம் ஜனநாயக விரோதி என்பதை செயலில் ருசுப்படுத்தினார்.

நிதி அமைச்சர் என்ற முறையில் நாடாளுமன்றத்தைப் பயன்படுத்தி உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு ஆப்படித்தமை மட்டுமல்ல, அதையும் தாண்டி, தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை உடன் வழங்குமாறு உத்தரவிட்ட நீதியரசர்களை, நாடாளுமன்ற விவகாரத்தில் தலையிட்ட குற்றத்துக்காக நாடாளுமன்றுக்கு அழைத்து விசாரணை செய்ய வேண்டும் என்று அச்சுறுத்தும் நிலைப்பாட்டைத் தமது அரசுத் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் முன்னெடுத்து, நாடாளுமன்றத்தில் அதை அறிவிக்கச் செய்து, நரித் தந்திர அரசியல் காய் நகர்த்தல்களை மேற்கொண்டிருக்கின்றார் அவர்.

ஜனநாயகத்திற்கு மட்டுமல்ல, சுயாதீன நீதித்துறைக்கும் தாம் விரோதி என்பதைப் பகிரங்கமாக வெளிப்படுத்த அவர் முயல்கின்றார் என்றே தோன்றுகின்றது.

# வவுனியா விபத்தில் மாணவன் மரணம்!

(வவுனியா நிருபர்)

வவுனியா, புதுக்குளத்தில் நேற்றுப் பகல் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த மாணவன் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பாடசாலை முடிவடைந்தபோது உறவினர் ஒருவர் தனது 7 வயது மகள் மற்றும் 9 வயதுடைய குறித்த சிறுவனையும் மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு சென்றபோதே விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வி. டினோஜன் (வயது 9) மற்றும் 7 வயது மாணவியும் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

எனினும் வி. டினோஜன் சிகிச்சை பலனின்றி நேற்று மாலை மரணமடைந்தார்.

மோட்டார் சைக்கிள் நிலைதடுமாறி விழுந்ததால் ஏற்பட்ட விபத்தா அல்லது அதே திசையில் வந்த டிப்பர் வாகனத்தில் மோதுண்டு ஏற்பட்ட விபத்தா என ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# உருக்குலைந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு!

(புத்தளம் நிருபர்)

உடப்பு கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் நேற்றுக் கரையொதுங்கியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பள்ளிவாசல்பாடு பிரதேச மீனவர்கள் நேற்றுக் காலை கடற்றொழில் நடவடிக்கைகளுக்காகச் சென்றபோது சடலம் ஒன்று கரையொதுங்கி கிடப்பதை அவதானித்தனர்.

பின்னர் சடலம் தொடர்பில் மீனவர்கள் உடனடியாக உடப்புப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த உடப்பு பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டனர்.

சடலத்தின் முகம், கை, கால் மற்றும் தலைப் பகுதிகள் முழுமையாக உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், பெண்ணின் சடலம் யாருடையது என இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சடலம் மீட்கப்பட்டமை தொடர்பில் ஏனைய பொலிஸ் நிலையங்களுக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காகப் புத்தளம் தள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்தச் சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உடப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சீனக் கப்பலுடனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடலில் சீனக் கப்பலின் ஆய்வு உரித்தும் அடிபட்டுப் போயிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டுகின்றன.

'ஷி யான் - 6' கப்பல் ஒக்டோபர் 25 ஆம் திகதி இலங்கைக்கு வரும் எனக் கடற்படையினர் முன்னர் கூறியிருந்த போதிலும் இதுவரை கப்பலுக்கு இராஜதந்திர ரீதியாக அனுமதி வழங்கப்படவில்லை.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து 474 கடல் மைல் தொலைவில் இந்தியப் பெருங்கடலில் 'ஷி யான்- 6' கப்பல் நேற்றுப் பிற்பகல் சஞ்சரித்தது.

'ஷி யான்- 6' கப்பல் இலங்கையிலுள்ள துறைமுகம் ஒன்றுக்குள் பிரவேசிப்பதற்கு இதுவரை இராஜதந்திர அனுமதி வழங்கவில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பல் ஓர் ஆய்வுக் கப்பல் என்பதால், அவர்கள் ஆய்வுகளை மேற்கொள்ளும் திகதிகள், பகுதிகள் தொடர்பில் தமக்குத் தெரிவிக்க வேண்டும் என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ருஹுணு பல்கலைக்கழகத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், இந்த கப்பல் வருகின்றது என நாரா நிறுவனம் முன்னர் அறிவித்திருந்தது.

ஆனால், பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய இரண்டு பேராசிரியர்களில் ஒருவர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் எனவும், மற்றைய பேராசிரியர் பல்கலைக் கழக அமைப்பை விட்டு வெளியேறியுள்ளார் என்றும் ருஹுணு பல்கலைக்கழகம் நேற்று அறிவித்துள்ளது.

# கனடா தூதரகத்தின் அதிகாரிகள் 40 பேரை வெளியேற்றும் இந்தியா!

கனடா தூதரகத்தின் அதிகாரிகள் 40 பேரை அதிரடியாக இந்தியா வெளியேற்றப் போகிறது என தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவுக்கும் கனடாவுக்கு இடையே மிகப்பெரும் மோதல் இடம்பெற்று வருகிறது. இந்த நிலையில், 40 கனட தூதரக அதிகாரிகளை திரும்பப் பெறுமாறு கனடாவிடம் இந்தியா கேட்டு கொண்டுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் 10 ஆம் திகதிக்குள் அவர்கள் வெளியேற வேண்டும் எனவும் தவறினால் அவர்களது பொறுப்பை நீக்கிவிடுவோம் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

மொத்தம் 62 கனடா அதிகாரிகள் இந்தியாவில் உள்ளனர். அவர்களது எண்ணிக்கையை 41 ஆக குறைக்க வேண்டும் என்று இந்தியா கூறியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவால் பயங்கரவாதி என்று அறிவிக்கப்பட்ட நிஜ்ஜார், கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.




அந்த காலிஸ்தான் பயங்கரவாதியை கொன்றதில் இந்தியாவுக்கு தொடர்பு இருக்கிறது என மீபத்தில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டினார்.

இந்த குற்றச்சாட்டால், ஏற்கனவே பதட்ட நிலையில் இருந்த இந்திய-கனடா உறவு மேலும் மோசமாகியது.

இந்த நிலையில், தற்போது 40 கனடா அதிகாரிகளை இந்தியா வெளியேற்ற உள்ளது என தகவல் வெளியாகியமை மேலும் உறவில் விரிசல் ஏற்பட வாய்ப்பு உள்ளது என தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் இந்திய அரசு இதுகுறித்து தற்போது வரை எந்த அறிக்கையையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# டில்லியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்!



இந்தியாவின் தலைநகர் டில்லியில் வலிமையான நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

இந்த நில நடுக்கம் நேற்று பிற்பகல் 2.25 மணியளவில் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நில அதிர்வு மிகவும் வலுவாக உணரப்பட்டது எனவும் கட்டடங்கள் அதிர்ந்தன என்றும் மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

நேபாளத்தில் 4.6 ரிச்டர் அளவில் நில நடுக்கம் ஏற்பட்டதையடுத்து டில்லி உள்பட வட இந்தியாவின் பல்வேறு இடங்களில் அதிர்வு உணரப்பட்டுள்ளது.

மேலும் வீடுகளில் உள்ள பொருட்கள் நில அதிர்வால் அசைந்த காட்சிகளும் சமூக வலைதளங்களில் பரவி வருகின்றன.

# 24 நோயாளிகள் திடீர் மரணம்: மகாராஷ்டிராவில் அதிர்ச்சி!

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள சங்கரோ சவான் என்ற அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 24 நோயாளிகள் 24 மணி நேரத்துக்குள் உயிரிழந்துள்ளனர்.

12 பிறந்த குழந்தைகளும் 50 வயதுக்கு மேற்பட்ட 12 முதியவர்களும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த முதியவர்கள் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பாம்பு கடித்த காரணங்களால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் ஆவர்.

மருந்துகள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் பற்றாக்குறையே இதற்கு காரணம் என வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வைத்தியசாலையின் பணிப்பாளர் கூறுகையில்,

பல்வேறு ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதால் பல சிரமங்களுக்கு ஆளானோம், வைத்தியசாலை 70 முதல் 80 கிலோ மீற்றர் சுற்றளவில் உள்ளது எனவே, நோயாளிகள் தொலைதூர இடங்களிலிருந்து வருகிறார்கள்.

நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவது சிக்கலை உருவாக்குகிறது. நாங்கள் தனியார் நிறுவனத்திடமிருந்து மருந்துகளை பெற வேண்டும். ஆனால் மருந்துகள் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்

# பௌதீகவியலுக்கான நோபல் பரிசு 2023: மூன்று விஞ்ஞானிகளுக்கு பகிர்ந்தளிப்பு!







2023 ஆம் ஆண்டுக்கான பௌதீகவியலுக்கான நோபல் பரிசு 3 பேருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ஜெர்மனி, ஸ்வீடன் நாட்டை சேர்ந்த 3 விஞ்ஞானிகளுக்கு நடப்பு ஆண்டுக்கான பௌதீகவியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்வீடனை சேர்ந்த விஞ்ஞானி ஆல்ப்ரெட் நோபல் நினைவாக, ஆண்டுதோறும் மருத்துவம், பௌதீகவியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் என 6 துறைகளின் கீழ் மகத்தான சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

அமைதிக்கான நோபல் பரிசு நோர்வேயிலும், ஏனைய அனைத்து துறைகளுக்கான நோபல் பரிசு ஸ்வீடன் நாட்டு தலைநகர் ஸ்டோக்ஹோமிலும் அறிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று நடப்பு ஆண்டுக்கான பௌதீகவியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில், நடப்பு ஆண்டில் பௌதீகவியல் துறையில் சாதித்த 3 பேருக்கு பௌதீகவியலுக்கான நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

அமெரிக்கா, ஜேர்மனி, ஸ்வீடன் நாட்டை சேர்ந்த பியரி அகோஸ்டினி, பெரென்க் க்ரவுஸ், ஆனி ஹுலியர் ஆகிய 3 பேருக்கு நடப்பு ஆண்டிற்கான பௌதீகவியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டிற்கான உடலியல், மருத்துவத்திற்கான நோபல் பரிசு இருவருக்கு நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.-

ஹங்கேரியில் பிறந்த கரலின் கரிகோ, அமெரிக்காவை சேர்ந்த ட்ரூ வைஸ்மேன் ஆகியோருக்கு இந்தப் பரிசு கூட்டாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# நேபாளத்தில் அடுத்தடுத்து நான்கு நிலநடுக்கங்கள்!

நேபாளத்தில் நேற்று அடுத்தடுத்து நான்கு நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

நேபாளத்தில் 25 நிமிடங்கள் வித்தியாசத்தில் அடுத்தடுத்து இரண்டு நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

அவை பிற்பகல் 2.25 மணிக்கும் 2.51 மணிக்கும் ஏற்பட்டுள்ளதுடன், 4.6 மற்றும் 6.2 ரிக்டர் அளவில் 5 கிலோமீட்டர் ஆழத்தில் பதிவாகின.

இதனையடுத்து, 15 நிமிடங்கள் கழித்து 3.1 ரிக்டர் அளவில் மூன்றாவது நிலநடுக்கமும் 13 நிமிடங்கள் கழித்து 3.1 மெக்னிட்யூட் ரிக்டர் அளவில் நான்காவது நிலநடுக்கமும் பதிவாகியுள்ளது.

நேபாளத்தின் திபாயல் நகருக்கு வடகிழக்கே 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இடத்தை மையமாகக் கொண்டு இந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

அமெரிக்காவின் புவியியல் ஆய்வு மையமும் இந்த நிலநடுக்கங்களை உறுதிப்படுத்தி உள்ளது.

நிலநடுக்கத்திற்கான தேசிய மையத்தின் கூற்றுப்படி, அருணாச்சல பிரதேசத்தில் மாலை 3.27 மணிக்கு 5.2 ரிக்டர் அளவிலான நிலநடுக்கமும் உத்தரகாண்டில் சில நிமிடங்களுக்குப் பிறகு 3.3 ரிக்டர் அளவிலான நிலநடுக்கமும் ஏற்பட்டுள்ளது.



# தமிழ்க் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மக்களுக்கு நீர் வசதி









கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் நக்கீரன் தங்கவேலுவின் எழுபது ஆண்டு அரசியல் இலக்கிய சமூக தொண்டைப் பாராட்டி றொறன்ரோ நகரில் எடுக்கப்பட்ட விழாவில் கிடைத்த அன்பளிப்புப் பணத்தில் வடக்கு – கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் ஊடாக முல்லைத்தீவு மாவட்டம், தண்ணீறுற்றுப் பகுதியில் குடிதண்ணீர் தேவைக்கான நீர் வசதியும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வீட்டு விவசாய தேவைக்கான நீர் வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

இதற்கான நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிவமோகன், எஸ்.சாந்தி மற்றும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.சுகிர்தன், ரி.ரவிகரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# இலங்கையில் செல்வந்த வரியை மீண்டும் அமுல்படுத்த வேண்டும்!

## உலக வங்கி பரிந்துரை

1992 ஆம் ஆண்டில் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட செல்வந்த வரியைப் பொருத்தமான புதிய முறையில் மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என உலக வங்கி பரிந்துரை செய்துள்ளது.

இலங்கை தொடர்பில் புதிய அறிக்கையொன்றை வெளியிட்டு உலக வங்கி இதனைக் குறிப்பிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான அறிகுறிகள் காணப்பட்டாலும், அது வெற்றிகரமான கடன் மறுசீரமைப்பு செயன்முறை மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்களை சார்ந்துள்ளது எனவும் உலக வங்கி கூறியுள்ளது.

அத்துடன், அபிவிருத்தி, வர்த்தக பொருளாதாரம் கொண்ட ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் வரிச் செயற்பாடுகள் மிகவும் குறைந்த மட்டத்தில் இருக்கின்றன எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் இலங்கையின் வரி அறவீடு மிகக்குறைந்த மட்டத்தில் இருந்தது எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெறுமதி சேர், கலால் வரி ஆகியவற்றின் அறவீட்டில் குறைந்த போக்குக் காரணமாக மொத்த வரி வருமானம் மிகக் குறைந்த மட்டத்தில் இருந்தது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஒலுவில் கடலில் நீராடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்

## மக்களிடம் உலமா சபை கோரிக்கை

(ஏ.எஸ்.மௌலானா)

ஒலுவில் பிராந்தியக் கடலில் நீராடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் ஒலுவில் கிளை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதனை வலியுறுத்தி அதன் தலைவர் மௌலவி ஏ.எல். பைஸல், செயலாளர் மௌலவி எம்.எல். பைசால் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அம்பாறை மாவட்டத்தின் ஒலுவில் பிரதேசத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், வெளிச்ச வீடு, ஒலுவில் துறைமுகம் போன்றவை அமைந்திருப்பதால் பல பகுதிகளில் இருந்தும் அநேகமானவர்கள் இவற்றைப் பார்வையிட வருகை தருகின்றனர்.

குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள், ஜி.சீ.ஈ. சாதாரண தரம் மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகள் எழுதிய பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள் மற்றும் சகபாடிகள் எனப் பலர் வருகை தந்து இந்த முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடுகின்றமையுடன் கடலில் நீராடுவதிலும் ஈடுபடுகின்றனர்.

ஆனால் , தென்கிழக்குப் பிராந்தியக் கடற்பரப்பில் ஒலுவில் சற்று ஆழம் கூடிய கடற்பரப்பாக காணப்படுகின்றது. இதனைப் பெரும்பாலானோர் அறிந்திருப்பதில்லை.

இந்நிலையில் கடலில் பரிச்சயம் இல்லாத இளையோர் பல சந்தர்ப்பங்களில் இக்கடலில் மூழ்கி மரணத்தைத் தழுவுகின்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்து வருகின்றன.

மரணத்தை எழுதி வைத்தவன் அல்லாஹ். எந்த இடத்தில் மரணத்தை அல்லாஹ் நாடி இருக்கின்றானோ அங்கே அவரைக் கொண்டு சேர்ப்பான். இருப்பினும் மனிதன் தற்பாதுகாப்பாக நடந்து கொள்வதன் மூலமாக மேற்படி இடர்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமாக இருக்கும்.

இப்பிரதேச கடற்கரையை அண்மித்து வசிப்பவர்களை விட தூர பிரதேசங்களிலிருந்து வருவோரே இக்கடலில் மூழ்கி அதிகம் மரணித்துள்ளனர். அதிலும் வெளியூர்களைச் சேர்ந்த பெரும்பாலான மாணவர்களின் உயிர்களை இக்கடல் காவு கொண்டுள்ளது.

கடந்த திங்களன்று அட்டாளைச்சேனையைச் சேர்ந்த தரம் 10 மாணவன் ஒருவர் பிரத்தியேக வகுப்பு முடிவடைந்த பின்னர் சக மாணவர்களுடன் இக்கடலில் நீராடச் சென்று மரணத்தை த் தழுவி ஜனாஸாவாக மீட்கப்பட்டுள்ளார்.



இது போன்ற மனதை உருக்கும் பல சம்பவங்கள் இங்கு தொடர்ச்சியாக இடம்பெறுவது மிகுந்த வேதனையை ஏற்படுத்துகின்றது. இவ்வாறான அனர்த்தங்களில் இருந்து எமது இளைய சமூகத்தைப் பாதுகாப்பது அவசியமாகும்.

ஆகையினால் குறைந்த பட்சம் நீச்சல் திறமை இல்லாதவர்கள் ஒலுவில் பிராந்தியக் கடலில் நீராடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் ஒலுவில் கிளை, பொதுமக்களை விநயமாக வேண்டிக்கொள்கின்றது. -என்றுள்ளது.

# ரயிலுடன் ஓட்டோ மோதி குடும்பஸ்தர் ஒருவர் பலி






(மட்டக்களப்பு நிருபர்கள்)

மட்டக்களப்பு, ஏறாவூர் பகுதியில் ரயிலுடன் ஓட்டோ மோதுண்டதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பில் இருந்து மாகோ சந்தி ரயில் நிலையத்தை நோக்கிச் சென்ற ரயிலுடன் ஓட்டோ மோதுண்டதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

பாதுகாப்பற்ற ரயில் கடவையில் ஓட்டோவைச் செலுத்திச் சென்ற ஏறாவூர், பழைய சந்தை வீதியைச் சேர்ந்த 40 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனநாயகத்தை ஒழிக்க ஆட்சியாளர்கள் முயற்சி

## நிகழ் நிலை காப்புச் சட்டமூலம் மீளப்பெறப்பட வேண்டும் என்று சஜித் வலியுறுத்து

அரசால் நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டுள்ள நிகழ் நிலை காப்புச் சட்டமூலம் மீளப்பெறப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் கூறியதாவது:-

"மக்களின் கருத்துச் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் இல்லாதொழிப்பதற்கு அரசு தயாராகி வருகின்றது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டமூலத்தின் பிரகாரம் அரசுக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்தால், சிறையில் அடைக்க வாய்ப்பு உள்ளது. நிகழ் நிலை காப்புச் சட்டத்தின் ஊடாக இவ்வாறான தண்டனைகளை விதிக்கவும் வாய்ப்பு உள்ளது.

அப்பிள், அமேசான், கூகுள், மெட்டா, எக்ஸ், புக்கிங்.காம் போன்றவற்றை உள்ளடக்கிய ஆசிய இணைய கூட்டமைப்பு இந்தத் திட்டத்துக்குக் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இவர்கள் நாட்டை விட்டு வெளியேறினால் வெளிநாட்டு முதலீடுகள் வீழ்ச்சியடையும்.

நிகழ் நிலை காப்புச் சட்டமூலத்தைக் கொண்டு வந்து இன்று என்ன நடந்துள்ளது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும், ஆசிய இணைய கூட்டமைப்பானது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இவற்றை விரட்டியடித்து விட்டால் சர்வதேச முதலீட்டை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்?

அரசின் இருப்பை உறுதிப்படுத்தவும், ஜனாதிபதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் எடுக்கும் முயற்சியே இதுவாகும். இது சர்வாதிகாரமான தவறான திட்டமாகும் என்பதால் இதை வாபஸ் பெற வேண்டும்." - என்றார்.



# நீதித்துறை உள்ளிட்ட அரச இயந்திரம் இங்கு சுயாதீனமாக இயங்கவேண்டும்

## யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வலியுறுத்து

நீதித்துறை மீதான அச்சுறுத்தல்களையும் சுயாதீனமற்ற அரச இயந்திரத்தையும் விமர்சித்தும் அது குறித்து விசனம் வெளியிட்டும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சங்கத்தின் இணைச்செயலாளர் த.சிவரூபன் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"யாருக்கும் அடிபணியாமல் நீதி வழுவாது தீர்ப்புக்களை வழங்கிய முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா, அரசியல் அழுத்தங்களாலும் உயிர் அச்சுறுத்தல் காரணமாகவும் மன அழுத்தத்துக்கு உள்ளாகி விரக்தியினால் பதவி விலகி நாட்டைவிட்டு வெளியேறி உள்ளமை அனைவர் மத்தியிலும் அதிர்வலைகளை உள்ளாக்கியுள்ளது.

இந் நிகழ்வு இலங்கை நாட்டின் நீதிப் பொறிமுறையின் சுயாதீனத்தன்மை அற்ற நிலையை மீண்டும் ஒரு தடவை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. இது போன்று யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கலாநிதி குருபரனும் அரச படைகளால் நிகழ்த்தப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு ஒன்றில் முன்னிலையானமைக்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு புதிய சுற்றுநிருபம் ஒன்றை வெளியிட்டு வழக்கிலிருந்து விலக நெருக்கடி கொடுக்க, அவரோ விரிவுரையாளர் பதவியைத் துறந்திருந்தார் என்பதை நினைவுபடுத்தவும், நாட்டின் இன்றைய நிலைக்கும், இனப்பிரச்சினைக்கும் சுயாதீனமற்ற நீதித்துறையும் ஒரு காரணமாகும் என்பதனை சுட்டிக்காட்டவும் நாம் விரும்புகின்றோம்.

நீதித்துறையைச் சார்ந்த நீதிபதி சரவணராஜா மட்டுமல்லர், இலங்கை அரச இயந்திரத்தின் சகல துறைகளும் அரசினதும் பேரினவாத சக்திகளினதும் அரசியல் அழுத்தங்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகின்றமை என்பது ஒரு புதிய விடயமல்ல. காலா காலமாக நடைபெறுகின்ற ஒரு விடயமே. இதனால் தான் உயிர்த்த ஞாயிறுத் தினத் தாக்குதல், இறுதி யுத்தம் உள்ளிட்ட பல சம்பவங்களுக்கு உள்ளக விசாரணையை மறுத்து சர்வதேச விசாரணையைப் பாதிக்கப்பட்ட தரப்புக்கள் கோருகின்றன.

இலங்கை நாடும், நாட்டின் மக்களும் இன்று எதிர்கொள்கின்ற பாரிய பொருளாதார நெருக்கடிகளின் மத்தியிலும் அரசும், பேரினவாத சக்திகளும் எவ்வித மாற்றமும் இன்றி முன்னரை விட மோசமாகச் செயற்படுவது நாட்டை மேலும் அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லும் என்பதோடு, அரசு தனது கையறு நிலையை மறைப்பதற்கும், அப்பாவி மக்களின் கவனங்களைத் திசை திருப்புவதற்குமே இவ்வாறான உணர்ச்சிகரமான, இன முறுகல் நிலைகளை ஊக்குவிப்பதோடு, அவற்றுக்குத் துணையும் போகின்றது என்பதை இனம், மதம் என சகல வேறுபாடுகளையும் கடந்து அனைத்து மக்களும் புரிந்துகொண்டு செயலாற்றினால்தான் இலங்கை என்ற எமது நாடு மீட்சியடையும்.

எனவே இலங்கை மற்றும் சர்வதேச முற்போக்கு சக்திகள் இணைந்து இந்த நிலையைச் சீர்செய்ய, நீதித்துறை உள்ளிட்ட அரச இயந்திரம் அனைத்தும் சுயாதீனமாக இயங்கக் காத்திரமான செயற்பாட்டை முன்னெடுத்து இலங்கையை முன்னோக்கிப் பயணிக்க உதவிட பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வேண்டுகின்றது." - என்றுள்ளது.

# கொன்சர்வேடிவ் கட்சியின் மாநாட்டில் கஜேந்திரகுமார்











இங்கிலாந்தின் கொன்சர்வேடிவ் கட்சி மாநாட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்டார். அத்துடன் முக்கிய தலைவர்களுடன் பல சந்திப்புகளையும் அவர் நடத்தினார்.

தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் கொன்சர்வேடிவ் உறுப்பினர்களையும் அவர் சந்தித்தார்.

தமிழர்களுக்கான கொன்சர்வேடிவ் வரவேற்பு நிகழ்வில் விருந்தினராகப் பங்கேற்று, அங்கிருந்த கொன்சர்வேடிவ் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆலோசகர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் முன்னிலையில் உரையொன்றையும் கஜேந்திரகுமார் எம்.பி. நிகழ்த்தினார்.



# மெய்வன்மையில் சாதித்த மாணவர்களுக்கு பாராட்டு

(எம்.ஏ.றமீஸ்)

கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் சாதித்த அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வு கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சாதனை மாணவர்கள் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு பேண்ட் வாத்திய இசை சகிதம் ஊர்வலமாய் அழைத்துச் செல்லப்பட்டனர்.

சாதனை படைத்த மாணவர்கள், மாணவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் இதன்போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.ஜெமீல், ஆசிரிய ஆலோசகர் எம்.எச்.ஹம்மாத், பிரதி அதிபர்களான எம்.இக்பால், எஸ்.எம்.எம்.ஜாபீர், உதவி அதிபர்களான ஏ.எல்.சம்சுல் பழீல், எம்.ஏ.நபீல் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில், அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மொத்தப் புள்ளிப் பட்டியலில் ஆண்கள் பிரிவில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தது.

அதேவேளை, இருபது வயதுக்குட்பட்ட ஆண்கள்பிரிவில்சிறந்தமெய்வல்லுநராக இப்பாடசாலையின் கே.அஹமட் நுஸ்பான் தெரிவு செய்யப்பட்டார். இவர் 100 மீற்றர் ஓட்டம் (11.10 செக்கன்கள்), 200 மீற்றர் ஓட்டம் (22.49) ஆகியவற்றில்மாகாணமட்டத்தில்புதியசாதனை படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.







# இன்றைய ராசி பலன்கள் - 04.10.2023

## மேஷம்

இன்று பொறுப்புகள் அதிகமாக காணப் படும். எனவே திட்டமிட்ட அணுகுமுறை தேவை. விஷயங்களை எளிதாக எடுத் துக்கொண்டால் மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

பணிநிமித்தமாக சிறிய பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரும். நீங்கள் பணிகளை ஒழுங்கான முறையில் திட்டமிடுவது உதவிகரமாக இருக்கும்.

உறவில் நல்லிணக்கத்தை தக்க வைத்துக் கொள்ள நீங்கள் உங்கள் துணையுடன் கண்ணியமான அன்பான தொனியில் பேச வேண்டும்.

குறைந்த அளவு பணம் காணப்படும். பணம் சேமிப் பது கடினமாக காணப்படும்.

யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது உங்களை சாந்தமான மனநிலையில் வைத்திருக்கும். ஆரோக்கி யத்தை பராமரிக்கவும் உதவும்.

## ரிஷபம்

உங்களின் நெகிழ்வான அணுகுமுறை காரணமாக நீங்கள் சாதகமான பலன் களைப் பெறலாம். சரியான தொடர்பாடல் பயனுள்ளதாகவும் பல ஆச்சரியங்களை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருக்கும்.

தவறுகள் ஏற்படாமல் தடுப்பதற்கு உங்கள் பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

உங்கள் துணையிடம் அமைதியான அணுகுமுறை தேவை. எரிச்சலடைவது, உணர்ச்சி வசப்படுவது போன்ற வற்றை தவிர்க்க வேண்டும்.

இன்று அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு காணப்படுகின்றது. அவ்வாறு பண இழப்பு நேரிட்டால் அதனை சமாளிப்பது கடினமாக இருக்கும்.

சளி மற்றும் இருமல் போன்ற உபாதைகளுக்கான வாய்ப்பு உள்ளது. குளிர்ச்சியான உணவுகள் உட்கொள் வதை தவிர்க்கவும்.

## மிதுனம்

தொழில் சார்ந்த மற்றும் யதார்த்த மான அணுகுமுறை தேவை. முக்கிய மான முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

தன்னம்பிக்கையுடன் பணியாற்று வீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லிணக்கத்தை தக்க வைத்துக் கொள்ள தேவையற்றவைகளை பேசுவதை தவிர்த்து விடுங்கள்.

அலட்சியம் காரணமாக இன்று பணத்தை இழக்க நேரலாம். எனவே பணத்தை கையாளும் போது அதிக கவனம் தேவை.

பற்களில் சிறிய அளவில் வலிகள் ஏற்பட வாய்ப்பி ருப்பதால் அவற்றில் கவனமாக இருக்க வேண்டும்.

## கடகம்

இன்று அமைதியான சௌகரியமான நாள். திருப்தியான எண்ணங்களும் எதையோ பெரிதாக சாதித்தது போன்ற உணர்வும் உங்களிடம் காணப்படும்.

சகபணியாளர்கள் உங்களுக்கு ஆதர வாக இருப்பார்கள். அவர்கள் உங்களுக்க நன்கு உதவுவார்கள். புதிய வேலைகிடைப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளது. இன்று பயணம் மேற்கொள்ள நேரலாம்.

உங்கள் துணையுடன் அன்பு வயப்பட்ட நிலையில் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று பயனுள்ள சேமிப்பிற்கான நாட்டத்தை கொண்டி ருப்பீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களின் நேர்மறையான மனப்போக்கின் காரண மாக இன்று ஆரோக்கியம் மகிழ்ச்சி அளிக்கக் கூடிய வகையில் காணப்படும்.

## சிம்மம்

இன்று சாதகமான நாள். புதிய தொடர்புகள் இன்று உங்களுக்கு மிக வும் பயன் தருவதாக அமையும். எண்ணங்கள் பூர்த்தியடைவதற்கான வாய்ப்புகள் உள்ளது.

பணியிடச் சூழ்நிலை உகந்ததாக இருக்காது. பணிச்சுமை அதிகமாக இருக்கும். அசௌ கரியங்கள் காணப்படும். அது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.

உங்கள் சமயோஜித புத்தியின் காரணமாக உங்கள் துணையிடம் நல்லுறவைப்பேணி மகிழ்ச்சி யுடன் காணப்படுவீர்கள். உங்கள் துணையுடன்வெளி யிடங்களுக்கு செல்ல வாய்ப்பு காணப்படுகின்றது.

ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் போன்ற வகையில் உங்கள் கடின உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரி உங்களை பாராட்ட வாய்ப்புள்ளது.

## கன்னி

கன்னி

இன்று மகிழ்ச்சியாகவும் ஆற்றலுட னும் இருப்பது உங்களுக்கு நல்லது. எதை யும் எதிர்பாராமல் செயலாற்றுங்கள். கடைசியில் வெற்றி உங்களுடையதே.

நீங்கள் பணிச்சுமைக்கு ஆளாவீர்கள் அது உங்களுக்கு கவலையை ஏற்படுத்- தும். பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்துங்கள்.

உங்கள் துணையுடன் ஈகோ சம்பந்தமான பிரச்சினை கள் எழலாம்.

உங்கள் வீட்டை மேம்படுத்துவதற்காக செலவு செய்வீர் கள். அதனால் செலவினங்கள் அதிகரிக்கும். உங்கள் நெருங்கிய உறவினர்களுக்காகவும் பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. தொண்டை சம்பந்தமான பிரச்சனைகளுக்கு வாய்ப்பு உள்ளது.

## துலாம்

இன்று சாதகமான அல்லது மகிழ்ச்சி யான நாளாக அமையாது.

பணிகளில் பொறுப்புகளை ஏற்க நேரிடும். பணியில் கவனம் தேவை. இது உங்கள் நலனை மேம்படுத்த வழிகாட்டும்.

உங்கள் மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதத்தில் நீங்கள் ஈடுபட லாம். இது உறவின் ஸ்திரத்தன்மையை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை ஆரோக்கியமாக காணப்படாது. செலவுகள் காரணமாக பணப்பற்றாக்குறை காணப்படும்.

தாயின் ஆரோக்கிய குறைபாடு காரணமாக பணம் செலவு செய்ய நேரிடலாம். இது உங்களுக்கு கவ லையை ஏற்படுத்தும்.

## விருச்சிகம்

இன்று மிகவும் துடிப்பான நாள். இன்று வெற்றிக்கு அடிகோலும் நாள். சுய வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுப் பீர்கள்.

பணிகளை குறித்த காலத்திற்குள் முடிப்பீர்கள். நீங்கள் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் சரியான நெறிமுறையை பின்பற்றுவீர்கள். அதன் காரணமாக அவரை நீங்கள் நன்றாக புரிந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் தைரியமான மனநிலை உங்களை இன்று ஸ்திரமான ஆரோக்கியத்துடன் வைத்திருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.10.2023



## தனுசு

எதிர்பாராத நிகழ்வுகள் நடக்கும். விஷயங்களை வேறு விதமாக அணுகுவது நல்லது. பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பணிச் சூழல் சவாலானதாக இருக்கும். பணிகளில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது. இதனை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறையை கையாள்வீர்கள். அவருடன் நீங்கள் அன்பு பாராட்டி பழகுவீர்கள். இது ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும்.

நிதிவளர்ச்சி இன்று சிறப்பாக காணப்படும். கடின முயற்சி மூலம் தான் நீங்கள் பலனை அதுவும் தாமதமாகத் தான் அடைய முடியம்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.



## கும்பம்

இன்று மிதமான பலன்களே கிடைக்கும் நாள். இன்றைய நிகழ்வுகள் உங்களுக்கு சாதகமாக அமைய அமைதியாக இருக்க வேண்டும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடித்துக் கொடுப்பதற்கான அதிர்ஷ்டம் இன்று காணப்படும். பணிநிமித்தமாக பயணம் மேற்கொள்வீர்கள். இது உங்களுக்குப் பொருந்தும்.

தேவையற்ற வாக்குவாதங்கள் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

இன்று பணவரத்துக்கான வாய்ப்பு குறைவு. எனவே இன்று கணிசமான தொகை காண்பது கடினமாக காணப்படும்.

இன்று ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரிடும்.உங்களின் தாயின் ஆரோக்கியத்திற்காக இன்று பணத்தை செலவு செய்வீர்கள்.



## மகரம்

இன்று நல்ல பலன்களைக் காண தொழில்சார்ந்த மற்றும் யதார்த்தமான அணுகுமுறை தேவை. எதிர்மறை எண்ணங்களை தவிர்த்தல் நலம்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும் பொழுது நீங்கள் தடைகளை சந்திக்க நேரலாம்.

உங்கள் துணையுடன் எந்த தொந்தரவும் இல்லாமல் இருக்க அவரை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

நிதி வளர்ச்சி இன்று அவ்வளவு எளிதாக கைக்கு எட்டிவிடாது. உங்கள் நிதிநிலைமை உங்களுக்கு திருப்தி அளிக்காது.

தொண்டை எரிச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. குளிர்ச்சியான உணவுகள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.



## மீனம்

உங்களின் இனிமையான தொடர்பாடல் மூலம் சாதகமான பலன்களைப் பெறுவீர்கள். உங்கள் வாழ்வில் முன்னேறுவதற்கான வழிகளை இன்று முயல்வீர்கள்.

பணிச்சூழல் சுமுகமாக காணப்படும். நற்பெயரை எடுப்பீர்கள். நீங்கள் பணியாற்றும் விதமும் உங்கள் தொடர்பாடலும் மகிழ்ச்சி தரும் வகையில் காணப்படும். அது உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

உங்களின் இனிமையான அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும். இது அவருடன் உங்களுக்கு நல்லுறவையும் நல்ல புரிந்துணர்வையும் ஏற்படுத்தும்.

இன்று அதிகமான பணம் காணப்படும். விரைவுக் கடன் மூலம் இன்று பணம் உங்களுக்கு கிடைக்க வாய்ப்பு உள்ளது.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thumilan Group Chairman ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS

CENTRAL PARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park